2026

No. of Printed Pages : **4**

20189 **9319**

பதிவு எண் | | | | | | |

### இரண்டாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

### பிரிவு - அ

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும், ஒவ்வொன்றிற்கும் **100** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

**1.** யார்க்குங் கயிறு - இச்சொல்லைப் பிரித்து புணர்ச்சி விதி தருக.

**2.** ‘நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்’

- இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளை எழுதுக.

**3.** எச்சவினை என்பது யாது ? அதன் வகைகளை சான்றுடன் விளக்குக.

**4.** தகுதிவழக்கு எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

**5.** நலங்கிள்ளி நெடுங்கிள்ளி போரிட்டனர் - இஃது எவ்வகைத் தொகை என்பதனை விளக்குக.

**6.** இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர் ஆகியவற்றிற்கு சான்று தருக.

[ திருப்புக

7. ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

8. பேசுதல் திறன் - பேச்சுத் திறன் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினை விளக்குக.

9. 'வெண்பொங்கல்' - இது எவ்வகைத் தொகை என்பதனை விளக்குக.

10. ''பயனற்ற ஒரு சொல்லுங்கூட கதையில் இடம்பெறுதல் கூடாது'' - இக்கூற்று யாருடையது ? எதனைப் பற்றியது ?

## பிரிவு - ஆ

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் **200** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. விகாரப் புணர்ச்சியை சான்றுடன் விளக்குக.

12. கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வாழ்க்கைப் பகுதியில் ஒன்றை மட்டும் போற்றுகிறவன் உருப்படியாவதில்லை. உடலை மட்டும் போற்றி உரமாக வைத்திருப்பவனும் அழிகிறான். அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகையாகி அவனைத் தீயவழியில் செலுத்திக் கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தை மட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்றுகிறவனும் இடைநடுவே அல்லல்படுகிறான். அவனுடைய உள்ளத்தின் அமைதியைக் கெடுத்து அல்லல்படுகிறது. உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம்; ஆனால் தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது. வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழவும் முடியாது.

**வினாக்கள் :**

1. இப்பத்தியின் மையக் கருத்து யாது ?
2. பத்தியில் இடம்பெற்றுள்ள இரு அருஞ்சொற்களை எழுதுக.
3. எவற்றைப் பேணவேண்டும் என இப்பத்தி வலியுறுத்துகிறது ?
4. பத்தியில் எதனை எதனுடன் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது ?

13. எடுத்துக்காட்டு உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

14. வினைமுற்றின் வகைகளை சான்றுடன் விளக்குக.

15. 'ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி' - விளக்குக.

16. தேன் என்னும் சொல்லின்முன் வருமொழியில் மூவின மெய்களும் எவ்வாறு புணர்ந்து வரும் என்பதனை சான்றுகள் தந்து விளக்குக.

17. மேடையில் பேசும்முன் மனத்திற்கொள்ள வேண்டியவை யாவை ?

18. சிறுகதை எழுத எத்தகைய பயிற்சிகளை வழங்கலாம் ?

## பகுதி - II

### பிரிவு - அ

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும், ஒவ்வொன்றிற்கும் **100** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

19. பாடத்திட்டத்தில் இடம்பெறவேண்டிய ஆசிரியர்களுக்கான குறிப்புகள் யாவை ?

20. நாற்குணம், நானிலம் - தொகைச் சொற்களை விரித்தெழுதுக.

21. படைப்புப் பெருமிதம் வாயிலாக படைப்பாற்றல் திறனை வளர்க்கமுடியும் என்பதனை விளக்குக.

22. பவணந்தியார் நூலுக்குக் கூறும் அழகுகளில் நான்கினை எழுதுக.

23. பிழை, தவறு இரண்டனையும் எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்திக் காட்டுக.

24. மாணவர்களிடம் காணப்படும் பிழைகளைக் களைய ஆசிரியர் வழங்கும் பயிற்சிகள் யாவை ?

25. ஒலிப்பதிவு நாடாக் கருவிகள் - குறிப்பு தருக.

26. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் மூலம் நடைபெறும் பயிற்சிகள் யாவை ?

27. கணினி வாயிலாக அகராதி, சொல்லடைவுகள் போன்றவற்றை எவ்வாறு தயாரிக்கலாம் என்பதனை குறிப்பிடுக.

28. அடைவுத்தேர்வின் நோக்கங்கள் யாவை ?

[ திருப்புக

2018/19 2018/19 2018/19

### பிரிவு - ஆ

**குறிப்பு : எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு, ஒவ்வொன்றிற்கும் **200** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

29. பாடநூலின் அமைப்பைப் பற்றி விளக்குக.

30. சொல் கற்பிக்கும் முறைகளைப் பற்றி எழுதுக.

31. மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் சொற்பயிற்சிகளுள் எவையேனும் நான்கனைக் குறிப்பிடுக.

32. மாணவர்களிடையே சிறுகதை எழுதும் திறனை எவ்வாறு வளர்ப்பீர் என்பதனை விளக்குக.

33. தூண்டுதல் பிழைக்கான காரணங்களை சான்றுடன் விளக்குக.

34. மாணவர்கள் செய்யும் வரிவடிவப் பிழைகளைக் குறித்து விளக்குக.

35. கணினிக் கல்வியை விளக்குக.

36. தமிழ் இணையத்தின் மூலம் அறியப்படும் பண்பாட்டுச் செய்திகளை எழுதுக.

### பகுதி - III

**குறிப்பு :** ஒவ்வொரு வினாவிற்கும் **500** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

37. (அ) பாடநூலுக்கும் ஆசிரியருக்கும் உள்ள தொடர்பினை விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) சொற்களஞ்சியம் பெருக்கும் முறைகள் பற்றி எழுதுக.

38. (அ) புறவயத் தேர்வை அமைக்கும் முறைகள் பற்றியும் அதன் நிறை குறைகள் பற்றியும் எழுதுக.

**அல்லது**

(ஆ) மாணவர்களிடம் படைப்பாற்றலை பெருக்க உதவும் உத்திகள் பற்றி எழுதுக.

-oOo-

2018 2018 2018 2018 2018